RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-4 இதழ்- 357 டிசம்பர்.27 2025 சனிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

## தமிழகம் முழுவதும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க 1.69 லட்சம் பேர் விண்ணப்பம்

சென்னை, டிச.27-

தமிழகம் முழுவதும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க 1.69 லட்சம் பேரும், பெயர் நீக்கம் செய்ய 1,211 பேரும் விண்ணப்பித்துள்ளனர்.



தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. கடந்த நவ.4ம் தேதிமுதல் தமிழகத்தில் வீடு வீடாககணக்கீட்டு படிவங்கள் வழங்கப்பட்டு கடந்த டிச.14ம் தேதி வரை பூர்த்தி செய்து பெறப்பட்டன. இதையடுத்து, டிச.19ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

அதன்படி, தமிழகத்தில் 5.43 கோடி வாக்காளர்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. 97.37 லட்சம் வாக்காளர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர். நீக்கப்பட்ட வாக்காளர்கள் மற்றும் புதிய வாக்காளர்கள் பெயர் சேர்க்கும் பணிகள் டிச.19ம் தேதியிலிருந்தே தொடங்கியது. இதற்கு ஜன.18ம் தேதிவரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து, வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கப்பட்டவர்கள் புதிதாக பெயர் சேர்க்கவும், ஏற்கெனவே நீக்கப்படாதவர்கள் நீக்கவும், சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அதிகாரியிடம் மற்றும் ஆன்லைனில் விண்ணப்பித்து வருகின்றனர்.

இது தவிர, தமிழகம் முழுவதும் அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி முகவர்கள் 2.64 லட்சத்துக்கும் மேற்பட்டோர் வாக்காளர்கள் சேர்ப்பு, ஆட்சேபம் தெரிவித்து நீக்குவதற்கான மனுக்களை அளித்து வருகின்றனர். பொதுமக்களைப் பொறுத்தவரை, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க படிவம் 6ஐ நேற்று முன்தினம் இரவு வரை 1,68,825 பேரும், பெயர் நீக்கம் செய்ய படிவம் 7ஐ 1,211 பேரும் அளித்துள்ளனர். அரசியல் கட்சிகள் சார்பில் பெயர் சேர்க்க 59 விண்ணப்பங்கள், பெயர் நீக்க 53 விண்ணப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் அதிமுக சார்பில் அதிக அளவில் விண்ணப்பங்கள் வழங்கப்பட் டுள்ளது குறிப்பிடத்தக்கது.

நோட்டீஸ் அனுப்பப்பட்டதா? இதற்கிடையே, தமிழகம் முழுவதும் 10 லட்சம் வாக்காளர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதாக நேற்று தகவல் வெளியானது. இதுகுறித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் கேட்டபோது, ''எஸ்ஐஆர் கணக்கெடுப்பு பணியில் பெறப்பட்ட படிவங்களில், முறையாக பூர்த்தி செய்யாதவர்கள், குறிப்பாக 2002, 2005 வாக்காளர் பட்டியலில் வாக்காளர் அல்லது அவர்களின் பெற்றோரின் பெயர்கள் இடம்பெற்றிருந்த விவரங்கள் குறிப்பிடாமல் இருந்தால், அவர்களிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பும்படி தேர்தல் ஆணையம் இதுவரை சொல்லவில்லை.

இனிமேல் நோட்டீஸ் அனுப்பி விசாரிக்க சொல்லுமா என்பதும் தெரியாது. முறையாக பூர்த்தி செய்யாமல் வழங்கிய படிவங்கள் தொடர்பான தரவுகளையும் நாங்கள் சேகரிக்கவில்லை'' என தெரிவித்தனர்

## இந்தியாவுடன் கருத்து வேறுபாட்டை உருவாக்க முயற்சி; அமெரிக்கா மீது சீனா குற்றச்சாட்டு


அமெரிக்கா, டிச.27-


அமெரிக்கா சீனாவுக்கும் பிற நாடுகளுக்கும் இடையே பொய்யான கதைகள் மூலம் கருத்து வேறுபாட்டை உருவாக்குகிறது. இந்தியாவுடனான எல்லை நிலைமை நிலையானது என சீன வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.



அருணாச்சல பிரதேச விவகாரத்தில் இந்தியா மற்றும் சீனா இடையே மீண்டும் மோதல் போக்கு ஏற்படும் என்று அமெரிக்காவின் பென்டகன் அறிக்கை வெளியிட்டு இருந்தது. அந்த அறிக்கையில், "சீனா அதன் நட்புநாடான பாகிஸ்தானைப் போல, ராணுவத்தின் மூலம் தொடர்ச்சியான அழுத்தம் கொடுக்கும். எனவே, இனி வரும் ஆண்டுகளில் இந்தியா சீனா இடையிலான உறவு பாதிக்கப்படும்" என பென்டகன் கூறியிருந்தது. இந்த அறிக்கையை சீன வெளியுறவுத்துறை அமைச்சகம் நிராகரித்துள்ளது. இது குறித்து சீன வெளியுறவுத் துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் லின் ஜியான் கூறியதாவது: பென்டகனின் அறிக்கை சீனாவின் பாதுகாப்புக் கொள்கையை திரிக்கும் வகையில் உள்ளது. சீனாவுக்கும் பிற நாடுகளுக்கும் இடையே பொய்யான கதைகள் மூலம் கருத்து வேறுபாட்டை உருவாக்குகிறது.

இந்தியாவுடன் முரண்பாடுகளை உருவாக்குகிறது. இந்தியாவுடனான எல்லை நிலைமை நிலையானது. அமெரிக்கா தனது ராணுவ மேலாதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்ள ஒரு சாக்குப்போக்கைக் கண்டுபிடிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சீனா இந்த அறிக்கையை உறுதியாக எதிர்க்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.





■ கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி கோவிலில் உலக அமைதிக்காக 27/12/25 தேதி மாலை ஏழுமணிஅளவில் சிறப்பு யாகம் வேள்விகள் (சித்தர்கள்வழியில்தமிழ்முறைப்படி) தவத்திரு. செழியன் சுவாமிகள் அவர்களால் நடைபெறும். அதனை தொடர்ந்து கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகளுக்கு சிறப்பு அபிஷேகம் ஆராதனைசெய்து பக்தர்களுக்கு அருட் பிரசாதம் வழங்கப்பட்டு மாபெரும் அன்னதானம்நடைபெறுவதால் அனைத்து ஆன்மீக மெய்அன்பர்களும் பொதுமக்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்து தருமாறு கோவில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

## வரிவிதிப்பால் பாதிக்கப்பட்ட தொழில்களுக்கு தமிழகம் துணை நிற்கும்; முதல்வர் ஸ்டாலின்

கள்ளக்குறிச்சி, டிச.27-

வரிவிதிப்பால் பாதிக்கப்பட்ட தொழில்களுக்கு தொழில்களுக்கு தமிழகம் தொடர்ந்து தோளோடு தோள் நின்று துணை நிற்கும் என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்து உள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் ரூ.1,350 கோடி செலவில் நடைபெற்று வரும் தோல் இல்லா காலணி ஆலை அமைக்கும் பணிகளை முதல்வர் ஸ்டாலின் ஆய்வு செய்தார். இது குறித்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கை: இன்று உளுந்தூர்பேட்டையில் வரவிருக்கும் காலணி ஆலையை நான் பார்வையிட்டேன்.




PouChen நிறுவனம் உலகின் மிகப்பெரிய பிராண்டட் காலணி உற்பத்தியாளர்களில் ஒன்றாகும். உலகளாவிய வரி விதிப்புமற்றும் நிச்சயமற்ற வர்த்தகச் சூழல்கள் இருந்தபோதிலும், அவர்கள் தமிழகத்தின் மீது உறுதியான நம்பிக்கை வைத்துள்ளனர்.

வரிவிதிப்பால் பாதிக்கப்பட்ட தொழில்களுக்கு தொழில்களுக்கு தமிழகம் தொடர்ந்து தோளோடு தோள் நின்று துணை நிற்கும். PouChen நிறுவனம் தமிழக அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, கள்ளக்குறிச்சியில் ரூ.2,302 கோடி முதலீடு செய்ய உள்ளது. இதனால் 20 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். உள்ளூர் வேலைவாய்ப்புக்கு ஒரு பெரிய ஊக்கத்தை அளிக்கும்.

2024ம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற தமிழக உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டும் பெருமை எனக்குக் கிடைத்தது. இன்றைய இந்த வருகை, அவர்களின் தொலைநோக்குப் பார்வையால் மேற்கொள்ளப்பட்ட வேலைகளை காண ஒரு வாய்ப்பாக அமைந்தது. இந்த நிகழ்வில் நைக் இந்தியா நிறுவனத்தின் இயக்குநர்களான உதய் சிங் மேத்தா மற்றும் சாமி வைகுண்டமன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும், புதிதாகப் பணியமர்த்தப்பட்ட ஐந்து பேருக்குப் பணி நியமனக் கடிதங்களை வழங்கும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. நாம் கொண்டு வரும் ஒவ்வொரு முதலீடும் தமிழகத்தில் மக்களுக்கு வேலைவாய்ப்புகளாக மாறுகிறது. இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

கலெக்டர் அலுவலகம் திறப்பு

கள்ளக்குறிச்சியில் அனைத்து வசதிகளுடன், அரசின் அனைத்து துறைகளும் செயல்படும் வகையில் ரூ.139.41 கோடியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மாவட்ட கலெக்டர் அலுவலகத்தை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

## வண்ணான்குளம், பெரவள்ளூரில் ஏரி ஆக்கிரமிப்புகளை உடனே அகற்ற வேண்டும்: உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, டிச.27-

கொளத்தூர் அடுத்த வண்ணான்குளம், பெரவள்ளூர் ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை போர்க்கால அடிப்படையில் அகற்ற வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



இதுதொடர்பாக சென்னை செம்பியத்தை சேர்ந்த ஜி.தேவராஜன் என்பவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது: கொளத்தூர் ஜிகேஎம் காலனி பகுதியில் உள்ள வண்ணான்குளம் ஏரி, பெரவள்ளூர் ஏரி பகுதியை சேர்ந்த சுமார் 300 ஏக்கர் நிலங்கள் முழுமையாக ஆக்கிரமிப்பின் பிடியில் சிக்கிஉள்ளன. இந்த ஏரிகளைச் சுற்றிஉள்ள அரசு புறம்போக்கு நிலங்களும் அதிகாரிகளின் துணையுடன் ஆக்கிரமிக்கப்பட்டு, கட்டுமானங்களாக மாற்றப்பட்டுள்ளன. இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.10 ஆயிரம் கோடிக்கு மேல் இருக்கும். இந்த 2 ஏரிகளிலும் உள்ள ஆக்கிரமிப்புகளை எந்த அரசியல் தலையீடும் இல்லாமல் முழுமையாக அகற்ற அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் அவர் கோரியிருந்தார். தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா, நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் இந்த வழக்கு விசாரணை நடந்தது. அப்போது, அம்பத்தூர் வருவாய்க் கோட்டாட்சியர் தரப்பில், 'இந்த ஏரிகளில் பெரும்பாலான பகுதிகள் ஆக்கிரமிப்பில் உள்ளன.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் சார்பில் பெருநகர கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்துக்கு அதிகப்படியான நிலங்கள் ஒதுக்கப்பட்டு, அப்பகுதிகளில் 50 ஆண்டுகளுக்கும் மேலாகஆயிரக்கணக்கான குடும்பங்கள் வசித்து வருகின்றன' என்று தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, நீதிபதிகள் கூறியதாவது: வண்ணான்குளம் மற்றும் பெரவள்ளூர் ஏரிகள் ஆக்கிரமிப்பில் இருப்பது வருவாய்த் துறை அதிகாரிகளின் அறிக்கையில் தெளிவாகியுள்ளது.

எனவே, 2 ஏரிப் பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை வருவாய்த் துறையினருடன் இணைந்து குடிசை மாற்று வாரியம், சென்னை மாநகராட்சி அதிகாரிகள் போர்க்கால அடிப்படையில் அகற்ற வேண்டும்.

இந்த பணிகளை கண்காணிக்க இந்த 3 துறைகளிலும் உள்ள மூத்த அதிகாரிகள் அடங்கிய குழுவை நில நிர்வாக ஆணையர் அமைக்க வேண்டும். ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட பிறகு, அதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு உத்தரவிட்டு, வழக்கை நீதிபதிகள் முடித்து வைத்தனர்

## "இந்து இளைஞர் கொலை பின்னணியில் மதம் சார்ந்த காரணங்கள் இல்லை" வங்கதேச அரசு!

டாக்கா, டிச.27-

வங்கதேசத்தில் கடந்த 24ம் தேதி இந்து இளைஞர் ஒருவர் கொல்லப்பட்ட நிலையில், அது மதம் சார்ந்த காரணங்களுக்காக நிகழவில்லை என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.




வங்கதேசத்தில் அரசியல் சூழல் நிலையற்றதாக மாறிக் கொண்டிருக்கும் நிலையில், அங்கு மதம் சார்ந்த தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. இஸ்லாமிய மதத்தை அவமதித்துவிட்டதாகக் கூறி தீபு சந்திர தாஸ் என்ற இந்து இளைஞர் மதவாத கும்பல் ஒன்றால் சமீபத்தில் கொடூரமாக அடித்துக் கொல்லப்பட்டார்.

கொலைக்குப் பிறகு அவரது உடலை மரத்தில் கட்டி தொங்கவிட்ட அந்த கும்பல், அதன் பிறகும் அவரைக் கொடூரமாக தாக்கியதோடு தொடர்ந்து அவரது உடலை தீயிட்டு எரித்தது. இது தொடர்பான வீடியோ வைரலாகியதை அடுத்து, இந்த சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்து இந்தியாவின் பல இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. ஐக்கிய நாடுகள் சபையும் இந்த சம்பவத்தைக் கண்டித்தது.

மேலும் ஒரு இந்து இளைஞர் கொலை... இந்த நிலையில், கடந்த 24ம் தேதி மேலும் ஒரு இந்து இளைஞர் அடித்துக் கொல்லப்பட்டார். கொல்லப்பட்ட நபர் ராஜ்பரி நகருக்கு அருகே உள்ள ஹோசென்டங்கா கிராமத்தை சேர்ந்த அம்ரித் மொண்டல் (எ) சாம்ராட் (29) என தெரியவந்தது. சாம்ராட் மற்றும் சிலர் சேர்ந்து ஒரு வீட்டுக்குச் சென்று பணம் கேட்டு மிரட்டியதாகவும், இதையடுத்து பொதுமக்கள் ஒன்றுகூடி அவரை சரமாரியாக தாக்கியதாகவும் கூறப்படுகிறது. இதில், சாம்ராட் உயிரிழந்தார்.

அரசு விளக்கம்: இந்தச் சம்பவம் தொடர்பாக அறிக்கை வெளியிட்டுள்ள வங்கதேச இடைக்கால அரசாங்கம், ''அம்ரித் மண்டல் எனும் சாம்ராட் கொலையின் பின்னணியில் மதம் சார்ந்த காரணங்கள் இல்லை என்பது தெரிவித்துள்ளது. காவல்துறையால் வழங்கப்பட்ட தகவல்களின்படியும் ஆரம்பக்கட்ட விசாரணையின்படியும் இது மத ரீதியாக நிகழ்ந்த தாக்குதல் அல்ல. மிரட்டிப் பணம் பறித்தல் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பான சம்பவம் இது.

கொல்லப்பட்ட நபர் பணம் கேட்டு அந்த பகுதிக்கு வந்த ஒரு பயங்கரவாதி. ஆத்திரமடைந்த உள்ளூர் மக்களுடனான மோதலில் அவர் உயிரிழந்தார். சாம்ராட்டின் கூட்டாளியான சலீம் என்பவரை கைது செய்துள்ள போலீஸார், அவரிடம் இருந்து ஒரு வெளிநாட்டு கைத்துப்பாக்கி மற்றும் ஒரு குழல் துப்பாக்கியை பறிமுதல் செய்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக ஏற்கெனவே மூன்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கொல்லப்பட்ட நபரின் மத அடையாளத்தை முன்னிலைப்படுத்தி, அதை ஒரு மதவாத தாக்குதலாக சித்தரிக்க ஒரு குறிப்பிட்ட தரப்பினர் முயற்சி மேற்கொண்டதை அரசாங்கம் மிகுந்த கவலையுடன் கவனத்தில் கொண்டுள்ளது. தொடர்புடைய அனைவரும் பொறுப்பான முறையில் நடந்து கொள்ளுமாறு அரசாங்கம் வலியுறுத்துகிறது.'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.



## தாராபுரம் சாரா செவிலியர் கல்லூரியில் பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையாரின் லேம்ப் லைட்டிங் (31st B.SC(N) & 33td GNM Batch) மற்றும் பட்டமளிப்பு

தாராபுரம், டிச.27-

தாராபுரம் சாரா செவிலியர் கல்லூரியில் பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையாரின் லேம்ப் லைட்டிங் (31st B.SC(N) & 33td GNM Batch) மற்றும் பட்டமளிப்பு (Batch-es 2018-2019-2020) நிகழ்ச்சி செவிலியர் கல்லூரி பயிற்சிமாணவ மாணவியர்களுக்காக நடைபெற்றது. கல்லூரியின் நிறுவனர் டாக்டர் ஜெய்லானி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பேராசிரியர் குளோரி சுரமஞ்சரி தாய் மற்றும் குழந்தை சுகாதார அதிகாரி சமயநல்லூர் மதுரை மற்றும் திருமதி சித்ரா செவிலியர் கண்காணிப்பாளர் அரசு மருத்துவமனை தாராபுரம் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையாரின் லேம்ப் லைட்டிங் நிகழ்ச்சியை துவக்கிவைத்தார்.

அடுத்தபடியாக இந்த விழாவில் பேராசிரியர். டாக்டர் ஆர்.மனோன்மணி M.D.DGO. DEAN, அரசு மருத்துவக் கல்லூரி திருப்பூர் தலைமை விருந்தினராக தங்களின் மாண்புமிகு வருகையும், பட்டதாரி மாணவியர் மாணவர்களுக்கு /கேடயம் மற்றும் பதக்கங்கள் வழங்கினார்கள்

முன்னதாக கல்லூரி முதல்வர் டாக்டர் எஸ்.பாரதி அவர்கள் வரவேற்றார். பேராசிரியர் குளோரி சுரமஞ்சரி செவிலியர் பணிகள் பற்றி பேசினார். சாராநர்சிங் கல்லூரி முதல்வர் டாக்டர் எஸ்.பாரதி புதிய செவிலியர் பயிற்சி மாணவிகளுக்கு பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையாரின் உறுதிமொழியையும், பதவிபிரமாணமும் செய்துவைத்தார்.

சாராநர்சிங் கல்லூரி தலைவர் பேராசிரியை மரியம் உல் ஆசியா. கல்லூரி இயக்குநர் பி.எம்.கே. முகமதுசதுர்தீன், கல்லூரி செயலாளர் ஜெ.பெனாசிர் பேகம், கல்லூரி துணைத் தலைவர் ஹாலிதா ஷமீம், கல்லூரி மக்கள் தொடர்பு அலுவலர் எசகாபுதீன், கல்லூரி நிர்வாக அதிகாரி ராஜேந்திரன் ஆகியோர் நிகழ்ச்சிக்கு முன்னிலைவகித்தனர்.

சாராசெவிலியர் கல்லூரி நிறுவனர் டாக்டர் ஜெய்லானி அவர்கள் விழாவில் பேசுகையில், இக்காலகட்டத்தில் செவிலியர்களின் தேவை அதிகரித்துள்ளதை கருத்தில்கொண்டு செவிலியர்களுக்கான தேசிய கமிஷனும் செவிலியர்களுக்காக தனி பல்கலைக்கழகம் ஒன்றை துவங்கவேண்டும் எனபேசினார். முடிவில் கல்லூரி பேராசிரியை தமிழரசி நன்றி கூறினார்.





## தேவகோட்டை சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் VAAKAI'26 கலை விழாப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றது

தேவகோட்டை, டிச.27-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் கல்வி வள்ளல் அண்ணாமலையாரின் 102ஆவது பிறந்தநாள் விழா வரும் டிசம்பர் 27 அன்று நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு மாணவர்களின் கலைத் திறன்களை வெளிப்படுத்தும் வகையில் 'அண்ணாமலையார் கலை விழா & VAAKAI'26' எனும் கலை விழாப் போட்டிகள் கடந்த டிசம்பர் 23 மற்றும் 24 ஆகிய இரண்டு நாட்களாக நடத்தப்பட்டன.



கல்லூரி முதல்வர் பேராசிரியர் நாவுக்கரசு தலைமையில் தொடங்கப்பட்ட இப்போட்டிகளில் பென்சில் ஓவியம், ரங்கோலி, மெகந்தி, நெருப்பில்லா சமையல், ஒளிப்படம் எடுத்தல், குறும்படத் தயாரித்தல், விளம்பரக் கேலி (Ad-Mad), பாடல், நடனம், அபிநயக் கூத்து உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடைபெற்றன.

கல்லூரியில் உள்ள 11 துறைகளைச் சேர்ந்த மாணவர்கள் உற்சாகமாகப் பங்கேற்று தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர். போட்டிகளில் அதிக புள்ளிகள் பெற்ற ஆங்கிலத் துறை மாணவர்கள் ஒட்டுமொத்த கேடயத்தின் முதலிடத்தையும், தமிழ்த் துறை மாணவர்கள் இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

இப்போட்டிகளுக்கு காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக திரைப்படக் கலைத் துறை உதவி பயிற்றுநர்கள், குறும்பட இயக்குநர்கள், புகைப்பட வடிவமைப்பு வல்லுநர்கள், தமிழ்நாடு அரசின் விருது பெற்ற கலைஞர்கள் மற்றும் கல்லூரிப் பேராசிரியர்கள் நடுவர்களாகப் பங்கேற்று மாணவர்களைத் தேர்வு செய்தனர்.

போட்டிகளைச் சிறப்பாக நடத்திட அனைத்துத் துறைப் பேராசிரியர்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கினர். நிகழ்வின் நிறைவாக இளைஞர் நலத்துறை ஒருங்கிணைப்பாளர் முனைவர் மு.சு. கண்மணி போட்டி முடிவுகளை அறிவித்து நன்றியுரை வழங்கினார்.

மாணவர்களுக்கான பரிசுகள் இன்று 27.12.2025 நடைபெறும் நிறுவன நாள் விழாவில் வழங்கப்படவுள்ளது.



## சிவகங்கை தெற்கு ஒன்றிய திமுக செயற்குழு கூட்டம்: ஒசெ. ஜெயராமன், பஞ்சவர்ணம், மனோகர், அர்ச்சுணன், சிங்கமுத்து, இராஜேஷ்வரி பங்கேற்பு

சிவகங்கை, டிச,27-

சிவகங்கை தெற்கு ஒன்றிய திமுக செயற்குழு கூட்டமானது ஒன்றியக் கழக செயலாளர் டாக்டர் ம. ஜெயராமன் தலைமையில் நநடைபெற்றது...

தெற்கு ஒன்றிய திமுக துணைச் செயலாளர் கொட்டகுடி பஞ்சவர்ணம் வரவேற்புரையாற்றினார் இந்த கூட்டத்தில் மாவட்ட பிரதிநிதி மனோகர் சாமிநாதன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு

ம.சிங்கமுத்து , மாவட்ட தொழிலாளரணி புதுப்பட்டி பா. அர்ச்சுணன் , மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி இராஜேஷ்வரி அண்ணாதுரை, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வண்டவாசி தங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்...

இதில் ஒன்றிய செயலாளர் ஜெயராமன் கலந்து கொண்டு பாக நிலை முகவர்களின் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார்...

இந்த நிகழ்ச்சியில் மூத்த முன்னோடி சித்தலூர் சக்திவேல் ,இளைஞரணி அழகுசுந்தரம் , ஒன்றிய நிர்வாகிகள் பொனனம்பலம்,மாரிக் கண்ணன் , கொட்டகுடி சம்பத்,செல்லப்பாண்டி , தங்கச்சாமி,முன்னாள் கவுன்சிலர் மாத்தூர் ரமேஷ் , இளையராஜா, ஐடி விங் கொட்டகுடி தேவேந்திரன் , முளைக்குளம் அய்யனார் , கோமாளிபட்டி அழகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

கூட்டத்தின் இறுதியில் ஒன்றிய செயலாளர் நிர்வாகிகள் அனைவருக்கும் ஆங்கிலப் புத்தாண்டு நாட்காட்டிகளை வழங்கி புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்தார்...





## சீனிவாச பெருமாளுக்கும் ஆண்டாள் அம்மையாருக்கும் திருமண வைபோகம் நிகழ்ச்சி நடைபெற்றது

.போடி, டிச.27-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் நகரில் எழுந்தருளியுள்ள அருள்மிகு சீனிவாச பெருமாள் கோவிலில் இன்று மாலை 6. மணி அளவில் சீனிவாசா பெருமாளுக்கும் அருள்மிகு ஆண்டாள் அம்மையார் அவர்களுக்கும் திருக்கல்யாண நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

இந்த வைபவ நிகழ்ச்சியில் போடி நகர பொதுமக்கள் மட்டுமின்றி ஏனைய கிராமங்களில் இருந்து வந்திருந்த பக்த கோடிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர் நிகழ்ச்சியானது வெகு விமர்சியாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கோவிலின் நிர்வாக குழு உறுப்பினர்கள் மற்றும் செயல் அலுவலர் தக்கார் மற்றும் அறநிலையத்துறை அதிகாரிகள் கோவில் குருக்கள் கார்த்தி மற்றும் பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பக்தர்களுக்கு பெருமாள ஆண்டாள் அம்மையாரின் ஆசிர்வாதம் பரிபூரணமாக கிடைக்கப்பெற்றதை எண்ணி மிகவும் பொதுமக்கள் வரிசையாக நின்று சாமி தரிசனம் செய்தார்கள்.

## "கல்வியை நேசி! எதிர்காலத்தை சுவாசி!"மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவிகளுக்கான புத்தாக்க பயிற்சி முகாம்

மதுரை, டிச.27-

மதுரை மாநகராட்சி தமுக்கம் மதுரை மாநாட்டு மையத்தில் மதுரை மாநகராட்சி மற்றும் ஸ்டார் குரு டிரஸ்ட், சக்ரா கிராண்ட், கனரா வங்கி மற்றும் அஜீபா ஈவெண்ட் ஆகிய நிறுவனங்களின் சார்பில் மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கான "கல்வியை நேசி! எதிர்காலத்தை சுவாசி!" புத்தாக்க பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்விக்குழுத் தலைவர் திரு.ரவிச் சந்திரன், மேலாண்மை பயிற்சியாளர் பேரா.திருக்கோஷ்டியூர் மணிகண்டன், ரவிஸ் அகாடமி நிறுவனர் முனைவர் எஸ்.இரவிச்சந்திரன், ஸ்டார் குரு டிரஸ்ட் நிறுவனர் திரு.குருசாமி ஆகியோர் மாணவ, மாணவிகளுக்கு ஊக்க உரை ஆற்றினார்கள்.





மதுரை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் 26 ஆரம்பபள்ளிகள், 14 நடுநிலைப் பள்ளிகள், 9 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 15 மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 64 பள்ளிகள் செயல்பட்டு வருகிறது. மதுரை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ. மாணவிகள் புத்தாக்கம் பெறுவதற்கு மாநகராட்சியின் சார்பில் விளையாட்டு போட்டிகள், மாவட்ட அளவில் மற்றும் மாநில நடைபெறும் பல்வேறு குறு விளையாட்டு போட்டிகள், உயர்கல்வி வழிகாட்டுதல், மற்றும் மேஜிக் ஷோ, புத்தகம் வாசிப்பு, பசுமை நடைபயணம், ஐதராபாத் அறிவியல் மையம், இஸ்ரோ விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு சுற்றுப் பயணம் உள்ளிட்டவை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது, மேலும் தனியார் நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதியின் கீழ் பள்ளிக்கூடங்கள் பல்வேறு கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மதுரை மாநகராட்சி மேனிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கான கல்வியை நேசி எதிர்காலத்தை சுவாசி ஒரு நாள் புத்தாக்க பயிற்சி முகாம் மதுரை மாநாட்டு மையத்தில் இன்று நடைபெற்றது. இப்பயிற்சி முகாமில் மாநகராட்சி மேனிலைப்பள்ளிகளில் பயிலும் சுமார் 1350 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் திரு.சண்முகதிருக்குமரன், வெள்ளி வீதியார் மாநகராட்சி மேனிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் திரு.அய்யர், பள்ளி மேற்பார்வையாளர் திருமதி.தனேஸ்வரி, மற்றும் ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.






## தேவகோட்டை இராம்நகர் உலக மீட்பர் ஆலயத்தில் கிறிஸ்துமஸ் விழா

தேவகோட்டை, டிச.26-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை இராம்நகர் உலக மீட்பர் ஆலயத்தில் கிறிஸ்துமஸ் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. இராம்நகர் பங்குத்தந்தை வின்சென்ட் அமல்ராஜ் தலைமையில் திண்டுக்கல் லயோலா டெக் பள்ளி இயக்குநர் அருட்தந்தை கிளாட்வின்,தே பிரித்தோ மேல்நிலைப்பள்ளி



தமிழாசிரியர் அருட்தந்தை லெனின்,திருத்தொண்டர் மைக்கேல் ஆகியோர் இணைந்து கூட்டுத் திருப்பலி நிறைவேற்றினார்கள். இந்நிகழ்வில் இராம்நகர் பங்கின் பிரிட்டோ இளையோர் இயக்கம் சார்பில் யேசு கிறிஸ்து பிறந்த நிகழ்வை சிறப்பாக செய்து காண்பித்தார்கள். திருப்பலியின் முடிவில் பங்கின் அன்பியங்களில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் குடில் நிகழ்ச்சியை சிறப்பாக செய்து காண்பித்த முதல் மூன்று இடங்களை பெற்ற அன்பியங்களுக்கு கேடயமும், கிராமங்களில் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற கிராமத்திற்கு கேடயமும் பரிசாக வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் அருட்சகோதரிகள், இராம்நகர் பங்கு இறைமக்கள், கிளை கிராம இறைமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ வேலூர் மாவட்டம் தோட்டப்பாளையம் அருகந்த முண்டி தெரு வசிக்கும் பொது மக்களுக்கு சீயோன் பெந்தகோஸ் சபை சார்பாக மிஸ்வா ஜெபக்குழுவினர் இணைந்து கிறிஸ்மஸ் கொண்டாடப்பட்டது மற்றும் 100 பார்வையற்றவர்களுக்கு துணி மற்றும் பிரியாணி வழங்கப்பட்டது சீயோன் ஆலய தலைமை போதகர் இமானுவேல் பால் சிறப்பு செய்தி வழங்கினார் இதில் சிறப்பு அழைப்பாளராக மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் கலந்து கலந்துகொண்டு புடவை வழங்கினார். இதற்கான ஏற்பாடுகளை பிரதர் லூக்கா வழங்கினார்.



## புகழ்பெற்ற வேலூர் ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடம், தங்கக் கோயிலில் ஸ்ரீ சக்தி அம்மாவின் ஜெயந்தி விழா முன்னிட்டு அங்கவஸ்திரம் வழங்கும் விழா

வேலூர், டிச.27-

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், அரியூர் அடுத்த திருமலைக்கோடி, புகழ்பெற்ற வேலூர் ஸ்ரீ புரம் ஸ்ரீ நாராயணி பீடத்தில் ஆண் டுதோறும் ஸ்ரீசக்தி அம்மாவின் ஜெயந்தி விழா, மிகுவும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. பல்வேறு சமூக நலத்திட்டங்களை ஸ்ரீ சக்தி அம்மா அவர்கள் வழங்கி வருகிறார்கள், 03.01.2026 அன்று ஸ்ரீசக்தி அம்மா 50ஆம் ஜெயந்தி விழாவை முன்னிட்டு 10008 ஏழை ஏழை எளியோருக்கு சேலைகள் வழங்கும் விழா 22.12.2025 திங்கட்கிழமை ஸ்ரீ சக்தி அம்மாவின் தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில் ஸ்ரீபுரம் பொற்கோயில் இயக்குனர் மற்றும் அறங்காவலர் டாக்டர். எம். சுரேஷ்பாபு மற்றும் ஸ்ரீநாராயணி மருத்துவமனை இயக்குநர் மற்றும் அறங்காவலர் டாக்டர். பாலாஜி ஸ்ரீநாராயணி பீடம் அறங்காவலர் சௌந்திரராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்த நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடம் நிர்வாகிகள் செய்திருந்தனர். இவ்விழாவில் கலவை சச்சிதானந்த சுவாமிகள் மற்றும் ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி குழும அறங்காவலர்கள், அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் உள்ளூர் வெளியூர் பக்தர்கள் என ஆயிரக்கணக்கானோர் திரளாக கலந்து கொண்டனர்.

## இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரம், டிச.27-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்;க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வேளாண் துறை சார்ந்த அலுவலர்கள் வேளாண்மை த்துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் தொடர்பாக விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். தொடர்ந்து, கடந்த மாத விவசாய குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாகவும், நிலுவையில் உள்ள மனுக்களின் நிலை தொடர்பாகவும் அலுவலர்கள் எடுத்துரைத்தார்கள். இன்றைய தினம் நடைபெற்ற கூட்டத்தில் விவசாய பிரதிநிதிகள் வட்டார வாரியாக தங்கள் பகுதியில் உள்ள வேளாண் தொடர்பான



கோரிக்கைகளையும், தேவைகளையும் தெரிவித்தனர். அவற்றில் கால்வாய் தூர்வாருதல், மின் இணைப்பு, கண்மாய்களில் உள்ள கரைகளை மேம்படுத்துதல், பயிர்க்கடன், கூட்டுறவு கடன் தொடர்பாக கோரிக்கை வைத்தனர்.

மேலும், கூட்டுறவு சங்கம் வாயிலாக புதிய உறுப்பினர்களுக்கு பயிர்க்கடன் வழங்க விவசாயிகள் கோரிக்கை வைத்ததையொட்டி, இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தியதுடன், உரக்கடை மூலம் தேவையான உரங்கள் இருப்பு இருப்பதை உறுதி செய்திட வேண்டும் எனவும், விவசாயிகள் கேட்கும் உரங்களை மட்டும் தனியார் உரக்கடை உரிமையாளர்கள் விற்பனை செய்திட வேண்டும் என தெரிவித்துடன் பிறபொருட்களை வாங்குவதற்கு உரக்கடை உரிமையாளர்கள் விவசாயிகளை கட்டாயப் படுத்தக் கூடாது எனத் தெரிவித்தார். மேலும் இது தொடர்பாக புகார்களை விவசாயிகள் தொடர்புடைய அலுவலர்களிடம் தெரிவிக்கலாம் எனவும் தெரிவித்தார்.

மேலும் வயல்வெளிகளில் தாழ்வாக செல்லும் மின்கம்பிகளை சரிசெய்திட வேண்டும் எனவும், அறுவடை காலம் துவங்கும் முன்னர் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை தயார் நிலையில் வைத்துக் கொள்வது தொடர்பாகவும், உரங்கள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைத்திட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தொடர்பாகவும் விவசாயிகள் தெரிவித்த கோரிக்கைகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இது தொடர்பான சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களை உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தியதுடன், விவசாயிகள் வழங்கும் ஒவ்வொரு மனுவின் மீதும் துறை சார்ந்த அலுவலர்கள் காலதாமதமின்றி உரிய நடவடிக்கை மேற்கொண்டு மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக மனுதாரருக்கு காலதாமதமின்றி தெரிவித்திட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.வ.சங்கரநாராயணன் அவர்கள், மாவட்ட வன அலுவலர் ஹேமலதா அவர்கள், வேளாண்மைத்துறை இணை இயக்குநர்; திரு.பாஸ்கரமணியன் அவர்கள், கூட்டுறவு சங்க மண்டல இணைப்பதிவாளர் திருமதி.ஜூனு அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்; (விவசாயம்) திருமதி. வாசுகி அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட விவசாய சங்க பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

## இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார்

இராமநாதபுரம், டிச.27-

2019-2020ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சி மானியக் கோரிக்கை அறிவிப்பில் தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்ட 27.12.1956ஆம் நாளை நினைவுகூறும் வகையில் நிகழாண்டில் ஆட்சிமொழிச் சட்ட வாரம் ஒரு வார காலத்திற்கு அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடப்படவேண்டுமென அரசு ஆணையிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தமிழ் வளர்ச்சி இயக்குநரின் ஆணையின் அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆட்சிமொழிச் சட்ட வாரம் 17.12.2025 முதல் 27.12.2025 வரையிலான ஒரு வார காலத்திற்கு கொண்டாடப்பட்டு வருகிறது. ஆட்சிமொழிச் சட்ட வார விழாவின் ஒரு நாள் நிகழ்வாக ஆட்சிமொழிச்சட்டம் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் இன்று 26.12.2025; மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைப்பெற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்தார்.




இப்பேரணியில் முகமது சதக் தஸ்தகிர் கல்வியியல் கல்லூரியிலிருந்து 100 மாணவர்கள் பங்கேற்றனர். இப்பேரணியானது மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தொடங்கி டிபிளாக் வரை சென்றடைந்தது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்வளர்ச்சி உதவி இயக்குநர் திருமதி ஜ.சபீர்பானு அவர்கள், தமிழறிஞர்கள், தமிழ் அமைப்புகளை சார்ந்தவர்கள், மாவட்ட ஜவகர் சிறுவர் மன்ற மாணவர்கள், கலை பண்பாட்டுத் துறை பகுதி நேர நாட்டுப்புற கலை பயிற்சி மாணவர்கள், ஒருங்கிணைப்பாளர் திரு.மு.லோகசுப்புரமணியம் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## மீறுசமுத்திரம் கண்மாயில் ரூ.7.40 கோடி மதிப்பீட்டில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய நவீனப்படுத்தும் பணி

தேனி, டிச.27-

தேனி மாவட்டம், தேனி அல்லிநகரம் நகராட்சிப்பகுதியில் நீர்வளத்துறையின் சார்பில் மீறுசமுத்திரம் கண்மாயில் ரூ.7.40 கோடி மதிப்பீட்டில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய நவீனப்படுத்தும் பணிகளை தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு.தங்க தமிழ்செல்வன் அவர்கள், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே. எஸ்.சரவணக்குமார் அவர்கள் முன்னிலையில் தொடங்கி வைத்தார்.

மாவட்டத்தின் தலைநகராக உள்ள தேனி நகரின் பொழுதுபோக்கு அம்சத்திற்காகவும், பொதுமக்கள் நடைபயிற்சி செய்வதற்காகவும் மீறு சமுத்திரம் கண்மாயில் நடைபயிற்சி பாதை மற்றும் பூங்கா அமைக்க வேண்டும் என பொதுமக்களிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றதைத் தொடர்ந்து, மீறுசமுத்திரம் கண்மாயில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய நவீனப்படுத்தும் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ரூ.7.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது.

அதனடிப்படையில், இன்றைய தினம் மீறுசமுத்திரம் கண்மாயில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய நவீனப்படுத்தும் பணிகளை தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு.தங்க தமிழ்செல்வன் அவர்கள், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே. எஸ்.சரவணக்குமார் அவர்கள் முன்னிலையில் தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் கீழ் மீறுசமுத்திரம் கண்மாயின் கரையை பலப்படுத்துதல், நடைபாதை, பூங்கா, தடுப்புச் சுவர், படகுகள் நிறுத்துமிடம், நுழைவு வாயில், அலுவலகக் கட்டடம், பாதுகாவலர் அறை, நவீன வசதிகளுடன் கூடிய கழிப்பறை, சாய்வு தளம், அமரும் மேடை, உணவுக்கூடம் மற்றும் பாலம் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

மேலும், ஆகாய தாமரை அகற்றுதல், மரங்கள் நடுதல், பறவைகள் தீவு அமைத்தல், கண்காணிப்பு புகைப்படக் கருவி அமைத்தல், பூங்கா மின் வசதிகள் அமைத்தல், படகுகள் மற்றும் பூங்கா விளையாட்டு கருவிகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இந்நிகழ்வில் தேனி அல்லிநகரம் நகர்மன்றத் தலைவர் திருமதி ரேணுபிரியா பாலமுருகன், திட்டக்குழு உறுப்பினர் திரு.நாராயண பாண்டியன், செயற்பொறியாளர் (மஞ்சாறு வடிநிலக்கோட்டம்) திரு.சரவணன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வேலூர் மாவட்டம், காட்பாடி தனியார் கல்லூரி வளாகத்தில் ராணுவ வீரர்களின் ஓய்வூதியதாரர்களின் வாரிசுதாரருக்கு குறை கேட்பு முகாம்

### முன்னாள் ராணுவத்தினர் சரியான ஆவணங்களை ஒப்படைத்தால் தங்களுக்கும் தங்கள் குடும்ப உறுப்பினர்களும் பணிப்பாளர்கள் முழுமையாக கிடைக்கும் என லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீ ஹரி தெரிவிப்பு

வேலூர், டிச.27-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பழைய காட்பாடி தனியார் பல்கலைக்கழக கல்லூரி வளாகத்தில், ராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் அவர்களின் வாரிசுகளுக்கு, ஓய்வூதியம் மற்றும் அதில் உள்ள குறைகளையும் கேட்டறிந்து அனைத்து தரப்பு தேவைகளை பூர்த்தி செய்ய வேலூர் உள்பட ஆறு மாவட்டங்கள் உள்ளடக்கிய மாவட்டங்களின் ஓய்வூதியர்களின் குறைகளை கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்காக குறை கேட்கும் ஒரு நாள் முகாம் நடைபெற்றது.

இதனை லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீ ஹரி துவக்கி வைத்து, முன்னாள் ராணுவத்தினர் மற்றும் அவற்றின் குடும்பத்தாரின் குறைகளையும் கேட்டறிந்தார். இந்த நிகழ்ச்சியில் விஜடி பல்கலைக்கழக வேந்தர்

ஜி.விஸ்வநாதன் உள்பட பலர் கலந்து





கொண்டனர்.

ராணுவத்தில் பணி புரிந்த பல ராணுவ வீரர்கள் அவர் களின் வீர தீர செயல்க ளுக்காக பல பதக்கங்களை பெற்றுள்ளனர் பலர் உயிரிழந்துள்ளனர்.

அவர்களின் பெருமைகளை தெரிவிக்கும் வகையில் அந்தந்த பகுதிகளில் ராணுவ வீரரின் புகைப்படங்களை வைத்து நினைவு நாளை கொண்டாட வேண்டும்.

அப்பொழுதுதான் வருங்கால சமுதாயத்திற்கு ராணுவத்தின் முக்கியத்துவத்தை தெரிந்து கொள்வார்கள். தமிழகத்தில் ராணுவத்தின் முக்கியத்துவத்தை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் சென்னையில் உள்ள மெரினா பீச் மற்றும் போர் நினைவுச்சின்னம் இடங்களில் ராணுவ டேங் அமைக்க முதலமைச்சரிடம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஒவ்வொரு முன்னாள் ராணுவத்தினரின் மற்றும் உறவினர்கள் பெயர்கள் பிறந்த தேதி மற்றும் ஆதார் எண் அனைத்து தகவல்களும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். அப்பொழுதான் தங்களுக்கு கிடைக்க வேண்டிய பணி பலன்கள் முழுமையாக எளிதில் கிடைக்கும். தவறுதலாக இருக்கும் பட்சத்தில் அதனை சரி செய்யும் வகையில் எளிமையான முறையில் மாற்றி அமைக்கப் பட்டுள்ளது. அதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். முன்னாள் ராணுவத்தினர் மற்றும் அவர் தம் குறைகள் அனைத்தும் தீர்க்கப்படும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. முன்னாள் ராணுவத்தினருக்கு கிடைக்கும் பலன்களை தவறாக பயன்படுத்த வேண்டாம், தவறான முறையில் முதலீடுகள் செய்ய வேண்டாம்.

பிற மாநிலங்களுக்கும் பிற நாடுகளுக்கும் செல்லும் போது முன்னெச்சரிக்கையாக செல்ல வேண்டும்.

தங்களுடைய குறைகள் எதுவாக இருந்தாலும் அந்தந்த பகுதியில் உள்ள முன்னாள் ராணுவத்தினர் அலுவலகத்தை அணுகி தெரிவித்தால் உடனடியாக குறைகள் நிவர்த்தி செய்யலாம். கடலூர் மற்றும் ராணிப்பேட்டையில் முன்னாள் ராணுவ வீரர்களும், அவர்களின் குடும்பத்தினரும் பயனடையும் வகையில் தனி மருத்துவமனைகள் விரைவில் துவங்கபடும்... மேலும் முன்னாள் ராணுவ வீரர்கள் தங்களின் குறைகளை செல்போன் மூலம் தெரிவிக்கும் வகையில் குறை தீர்க்கும் மையம் உருவாக்கபடவுள்ளது எனவும் அதற்கான சோதனைகள் நடந்து வருகிறது முன்னாள் ராணுவ வீரர்கள் நாட்டிற்கு தேவைப்படும் போது சேவையாற்ற முன் வரவேண்டும் உங்கள் குறைகளை போக்க தமிழக முதல்வர் மற்றும் கேரள அமைச்சரை சந்தித்து ஒரு குழு அமைக்க கோரிக்க வைத்துள்ளேன் அவ்வாறு குழு அமைத்தால் குறைகளை போக்க ஏதுவாக இருக்கும் அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என இவ்வாறு கூறினார்.

## வருகின்ற 29.12.2025 முதல் 28. 1. 2026ஆம் தேதி வரை, அனைத்து மாட்டினங்களுக்கும், 8வது சுற்று கால் மற்றும் வாய்க்காணை (கோமாரி) தடுப்பூசி செலுத்தும் பணி நடைபெறவுள்ளது

சிவகங்கை, டிச.27-

சிவகங்கை மாவட்டத்தில், தேசிய கால்நடை நோய்த்தடுப்புத் திட்டத்தின் கீழ் (NAD-CP & FMD 8th ROUND) 2,11,200 (இரண்டு லட்சத்து பதினொராயிரத்து இருநூறு) மாட்டினங்களுக்கு கால் மற்றும் வாய்க்காணை நோய் வராமல் தடுக்கும் பொருட்டு, கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் வருகின்ற 29.12.2025 முதல் 28.1.2026 ஆம் தேதி வரை இலவசமாக தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டு, மாவட்டத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும் கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய்க்காணை (கோமாரி) தடுப்பூசி போட திட்டமிடப்பட்டுள்ளது.

இத்தடுப்பூசி பணிக்காக 69 கால்நடை மருத்துவ குழுக்கள் உருவாக்கப்பட்டு, தினந்தோறும் ஒரு குழுவானது 150 கால்ந டைகள் வீதம் தடுப்பூசி போட பணிக்கப்பட்டுள்ளது. இதில், நான்கு மாத கன்றுகள் முதல் அனைத்து வயதுடைய மாட்டின ங்களு க்கும் தடுப்பூசி கள் போடப்படவுள்ளது. எனவே, கால்நடை வளர்ப்பேபார்கள் மேற்குறிப்பிடப்பட்ட நாட்களில் நடைபெறும் தடுப்பூசி முகாம்களை கருத்தில் கொண்டு, கால் மற்றும் வாய்க்காணை நோயிலிருந்து தங்களது கால்நடைகளை பாதுகாத்துக்கொள்ள, தங்களது இருப்பிடத்திற்கு அருகிலுள்ள கால்நடை மருத்துவ நிலையங்களை அணுகி, கால்நடைகளுக்கு இலவசமாக கோமாரி தடுப்பூசி செலுத்தி கோமாரி நோயிலிருந்து பாதுகாத்திடலாம் என மாவட்ட ஆட்சித்த லைவர் திருமதி கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.



■ வேலூர் மாவட்டம் டோல்கேட் பஸ் நிலையம் அருகே முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பிறந்த நாளை முன்னிட்டு பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக தொரப்பாடி மண்டல தலைவர் மதியழகன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக மாநில பொதுச் செயலாளர் கார்த்தியாயினி கலந்து கொண்டு திருவுரு படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டனர் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன இந்த நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட சமூக ஊடக பிரிவு செயலாளர் சந்தானம்,அரசு நலத்திட்ட பிரிவு மாவட்ட செயலாளர் சரத்குமார், மண்டல பொதுச் செயலாளர் செல்வராஜ், மற்றும் முன்னாள் ஆன்மீக பிரிவு செயலாளர் முனுசாமி, எம். ராஜேஷ்குமார் மற்றும் கட்சியின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



# ஸ்மைல் காப்பகத்தில் ஆதரவற்ற முதியோர்களுடன் கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

கன்னியாகுமரி, டிச.27-

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் ஸ்டாலின் அறிமுகப்படுத்திய திட்டமான நிமிர் திட்ட மூலம் குமரி மாவட்டத்தில் போக்சோ. பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து பல்வேறு விழிப்புணர்வு ஏற்படுத்தி படுத்தி வந்தனர் இந்நிலையில் நிமிர் குழுவினர் மூலம் அகில இந்திய மக்கள் நலக் கழக மாநில துணைத் தலைவரும் மாவட்ட தலைவருமான வழக்கறிஞர் .பி.சதீஷ் அவர்கள் கன்னியாகுமரி பகுதியில் அமைந்துள்ள ஸ்மைல் ஆதரவற்ற முதியவர்களுடன் கிறிஸ்துமஸ் கேக் வெட்டி இனிப்புகளை வழங்கி கொண்டாடினர். அப்போது அங்கு இருந்த முதியவர்கள் காவலர்களுக்கும் அகில இந்திய மக்கள் நலக் கழகத்தின் மாநில துணை தலைவரும் மாவட்ட தலைவருமான வழக்கறிஞர் சதீஷ் அவர்களுக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.



# மதுரை கப்பலூரில் அகற்றப்பட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் சிலையை மீண்டும் நிறுவ கோரி மனு

மதுரை, டிச.27-

மதுரை மேற்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சி தலைமையில் விஜயநகர நாயக்கர் வரலாற்று மீட்பு அசோசியேசன் மற்றும் மதுரை நாயக்கர் வம்சம் ஆகியோர் இணைந்து இன்று மதுரை மாவட்ட ஆட்சியரை சந்தித்து: கடந்த 1998 ஆம் ஆண்டு கப்பலூர் கிராமத்தில் நெடுஞ்சாலை துறையின் சார்பாக மதுரை கன்னியாகுமரி நெடுஞ் சாலை அமைப்பதற்க ாகபாலம் கட்ட இடையூறாக இருப்பதாக கூறி அங்கு இருந்த சுதந்திரப் போராட்ட மாவீரன் வீரபாண்டிய கட்டபொம்மன் சிலையை வேறு இடத்தில் வைத்து தருகிறோம். தற்காலிகமாக ஒரு இடத்தில் வைக்கவும் என ஊர் மக்களிடம் தெரிவித்ததை அடுத்து சிலை அங்கிருந்து அகற்றப்பட்டு ஊர் சாவடியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.கடந்த 27 ஆண்டுகளாக அந்த சிலை மீண்டும் வேறொரு இடத்தில் நிறுவப்படாமல் உள்ளது தங்களுக்கு வேதனை அளிப்பதாகவும் சுதந்திரத்துக்கு பாடுபட்ட மாவீரரின் சிலையை மீண்டும் கப்பலூர் கிராமத்திற்கு செல்லும் ரயில்வே கேட்டிற்கு எதிரே உள்ள காலி இடத்தில் வருகின்ற ஜனவரி 3 ம் தேதி வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த தினத்திற்க்கு முன்னால் நிறுவித் தர வேண்டும் என கோரிக்கையை மாவட்ட ஆட்சியரிடம் மனுவாக அளித்தனர். இந்நிகழ்வில் பாரதிய ஜனதா கட்சி மாநில செயலாளர் கதலி நரசிங்கப் பெருமாள்,மதுரை மேற்கு மாவட்டத் தலைவர் சிவலிங்கம்,ஊடகப்பிரிவு தலைவர் காளிதாஸ்,மேற்கு மாவட்ட பார்வையாளர் ராஜரத்தினம், விஜயநகர நாயக்கர் வரலாறு மீட்பு தலைவர் பாஸ்கரன்,மதுரை நாயக்கர் வம்ச நிறுவனத் தலைவர் ஜெயபாலன் நாயுடு,ரங்கராஜ் கிருஷ் ணகுமார் பாலமுருகன் மற்றும் ஏராளமான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



■ தாராபுரம், மெட்ரோ சிட்டியில்... வழக்கறிஞர் கிருட்டிணக்குமார் ஆசிரியை சுமித்ரா ஆகியோரின் " ஈ.வே.ரா " இல்லம் திறப்புவிழா மதியம் திராவிடர் விடுதலை கழகம் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் தலைமையில் நடந்தது.. நிகழ்வில் மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் கயல்விழி செல்வராசு, வழக்கறிஞர்கள் செல்வராசு, இராசேந்திரபாபு, சிவக்குமார், ஐயப்பன், பன்னீர்செல்வம், காட்டாறு குழுவினர், தாமரைகண்ணன், புரட்சிக்கொடி, பழனி ஜவகர், பழ.முருகேசன், காங்கேயம் பாண்டியன், மற்றும் திராவிடர் அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் திரளாக பங்கேற்றுச் சிறப்பித்தனர். தி.வி.க தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் செய்தியாளர்களின் பல்வேறு கேள்விகளுக்கு விடையளித்தார்., மேலும் வரும் திங்கள்கிழமை ( 29/12/2025 ) கோவையில் நடைபெற உள்ள,"ஜாதிய தீண்டாமைக்கு எதிரான மாபெரும் போராட்டம் " குறித்து விரிவாக எடுத்து கூறினார்., விழாவினை திருவள்ளுவர் படிப்பகம் வே.ப.இராசாமணி ஒருங்கிணைத்தார்.

# தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள பெண் / திருநங்கை ஓட்டுநர்கள் தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றியை தெரிவித்துள்ளனர்





தமிழ்நாடு அரசு கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழி லாளர்கள் பயன் பெறும் பொருட்டு அரசாணை எண். 198 ன்படி கட்டுமானத் தொழிலாளர்கள் நலவா ரியம் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. அரசாணை எண். 56 இன்படி தனி வாரியம் ஏற்படுத்தப்பட்டு, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலா ளர்கள் சமூக பாதுகாப்பு நலவா ரியம் உள்ளிட்ட 19 நலவாரியங்கள் ஏற்படுத்த ப்பட்டு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அமைப் புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங் கள் பழுதுப ார்க்கும் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள பெண் / திருநங்கை ஓட்டுநர்கள் சொந்தமாக ஆட்டோ வாகனம் வாங்குவதை ஊக்குவித்து, அதிக வருமான ஈட்டி சுயதொழில் செய்யும் வாய்ப்பினை உருவாக்கிட புதியதாக ஆட்டோ வாகனம் வாங்குவதற்கு ஆகும் செலவினத்தில் மானியமாக தலா ரூ.1,00,000 1000 பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

மேற்படி திட்டத்தில் இதுவரை மதுரை மாவட்டத்தில் கடந்த 2023 முதல் தற்போதுவரை 833 பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு தலா ரூ.1,00,000 வீதம் ரூ.8,33,00,000/மும், 53 திருநங்கை ஆட்டோ ஓட்டுநர்களுக்கு ரூ.53,00,000/மும், 10 இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்களுக்கு தலா ரூ.20,000 வீதம் ரூ.2,00,000 /மும் என மொத்தம் ரூ.88,800,000 மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தொழிலாளர் நலத்துறையின் tnuwwb.tn.gov.in என்ற இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டிய ஆவணங்கள் :

1. நலவாரிய அசல் அடையாள அட்டை, 2.ஆதார் அடையாள அட்டை (தொலைபேசி எண் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்), 3.குடும்ப அட்டை (அசல்), 4.வயது ஆவணம் (குடும்ப அட்டை / வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுநர் உரிமம் /பள்ளிச்சான்று), 5.சாதி சான்றிதழ் அல்லது சுயசான்றிதழ் SC/ST மட்டும் 6.தேசியமய மாக்கப்பட்ட வங்கி கணக்கு புத்தகம் (அசல்), 7.நியமனதாரரின் வயது ஆவணம் (அசல்), 8.தொழிலாளியின் புகைப்படம் கையொப்பம். 8.ஆட்டோ மானியம் ஓட்டுநர் உரிமம், விலைப்புள்ளி பட்டியல், விற்பனை முகவரின் உறுதிமொழி மற்றும் பயனாளியின் உறுதிமொழி, 9. மின்சார இருசக்கர வண்டி) e-Scooter) விலைப்புள்ளி பட்டியல்,

e-Scooter விற்பனை முகவரின் உறுதிமொழி மற்றும் பயனாளியின் உறுதிமொழி போன்ற ஆவணங்களை tnu-wwb.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்ய வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற திருநங்கை ருத்ரா அவர்கள் தெரிவிக்கையில்,

என்னுடைய பெயர் ருத்ரா. மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் 1 இலட்சம் மானியத்தில் திருநங்கைகளுக்கு ஆட்டோ வழங்கியது சந்தோ ஷமாக இருக்கிறது. வீட்டிலிருந்து புறக்கணிக்கப்பட்டு வெளியில் வந்த எங்களுக்கு தன்னம்பிக்கையுடன் ஆட்டோ வழங்கியது சந்தோஷமாக உள்ளது. நாங்கள் சுயமாக சம்பாதித்து சுயமாக உழைப்பதற்கு இது எங்களை ஊக்கப்படுத்துகிறது என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளி உமா அவர்கள் தெரிவிக்கையில்,

எனது பெயர் உமா, நாங்கள் ஊமச்சிகுளத்தில் வசித்து வருகிறேன். என் கணவரும், நானும் ஆட்டோ ஓட்டுநர்கள். அவர் வாடகை ஆட்டோ தான் ஓட்டி வருகிறார். வாடகை கொடுத்து எங்களால் குடும்ப கஷ்டத்திலிருந்து மீண்டு வர முடியவில்லை. அது தொடர்பாக தொழிலாளர் துறை அலுவலகத்திற்கு சென்று ஆட்டோ மானியம் திட்டம் குறித்து அறிந்து கொண்டோம். அலுவலர்கள் அனைவரும் எனக்கு நன்றாக உதவியதன் மூலமாக பதிவு செய்தேன். அதனடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 1 இலட்சம் மானியத்தில் ஆட்டோ வழங்கியது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. சொந்த ஆட்டோவால் எங்கள் வாழ்வா தாரத்தை உயர்த்தி டுவோம். இத்தகைய உதவிபுரிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளி ஷேக் முகம்மது அவர்கள் தெரிவிக்கையில்,

என்னுடைய பெயர் ஷேக் முகம்மது, நான் எம்.பி.ஏ படித்து வருகிறேன். அதே நேரத்தில் டெலிவரி வேலை செய்து வருகிறேன். டெலிவரி வேலை செய்வதால் மாதம் மாதம் ரூ.4000 முதல் 5000 வரை பெட்ரோல் போடுவதற்கு செலவாகிறது. இணையம் சார்ந்து டெலிவரி செய்பவர்கள் என்ற அடிப்படையில் ரூ.20,000/ மானியம் பெற்றுள்ளேன். நான் புதிய இஸ்கூட்டர் வாங்க இந்த மானியத்தொகை மிகவும் உதவிகரமாக இருந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கரங்களால் சாவியை பெற்றதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எனவே இத்தகைய உதவி செய்த தமிழ்நாடு அரசிற்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.**







■ அகில இந்திய மகளிர் மற்றும் சமூக நல அறக்கட்டளை சார்பில் 23/12/2025 அன்று நடைபெற்ற பெண் தொழில் முனைவோருக்கான பயிற்சி மற்றும் மகளிர் அதிகாரமளிப்பு முன்முயற்சி தேசியப் பிரிவு துவக்க விழாவை முன்னிட்டு கிஸிகூஷிகி அரசு சாரா அமைப்பு கூட்டமைப்பு நிறுவனர் / மேலாண்மை இயக்குநர் / தலைவர் ஆர். சுரேஷ் அழைப்பின் பேரில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொழில் முனைவோர் கைவினை பொருட்கள் தயாரிப்பு பயிற்சியலர்கள் சந்திப்பு மற்றும் கலந்த ஆலோசனைக் கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக மகளிர் நல மேம்பாட்டு பிரிவு டாக்டர். வி. சித்ரா குமரேசன் கலந்து கொண்டார்..

# விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், வருகின்ற 31.12.2025 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, டிச.27-

சிவகங்கை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வருகின்ற 31.12.2025 (புதன்கிழமை) அன்று முற்பகல் 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. மாவட்டத்தின் அனைத்துத்துறை உயர் அலுவலர்கள் பங்கேற்கும் இக்கூட்டத்தில் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள விவசாயப் பெருமக்கள் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த குறைகளைத் தெரிவித்துஅதனை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.

# தமிழக வெற்றிக் கழகம் சார்பில் வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு நாள்: மாணவர்களுக்கு பேச்சு மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தி உற்சாகம்

காரைக்குடி, டிச.27-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி சாக்கோ ட்டையில் சிவகங்கைச் சீமையின் ராணி வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, தமிழக வெற்றிக் கழகத்தின் சாக்கோட்டை மேற்கு ஒன்றியம் சார்பில் சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றன.



தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரும், மக்களின் விருப்பத்திற்குரிய முதல்வருமான தளபதி ஆணைப்படியும், கட்சியின் பொதுச் செயலாளர் N. ஆனந்த் வழிகாட்டுதலின்படியும் இந்த நிகழ்வு ஒருங்கிணை க்கப்பட்டது. மாவட்டச் செயலாளர் வி.ஜோசப் தங்கராஜ் வேண்டுகோளுக்கிணங்க, சாக்கோட்டை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் க.சரத்பாலமுருகன் தலைமையில் இவ்விழா சிறப்பாக நடைபெற்றது.

குழந்தைகளுக்கான போட்டிகள்:

வேலுநாச்சியார் அவர்களின் வீர வரலாற்றை இன்றைய இளம் தலைமுறைக்குக் கொண்டு செல்லும் நோக்கில், பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான குழந்தைகள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

பரிசளிப்பு விழா:

போட்டிகளில் பங்கேற்ற அனைத்துக் குழந்தைகளுக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் ஊக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன. வீரமங்கையின் தியாகத்தையும் ஆளுமையையும் போற்றும் வகையில் அமைந்த இந்நிகழ்வு, பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

நிகழ்வின் நிறைவாக, சாக்கோட்டை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் க. சரத்பாலமுருகன் விழாவில் கலந்து சிறப்பித்த கட்சி நிர்வாகிகள், பெற்றோர்கள், குழந்தைகள் மற்றும் கழகத் தோழர்களுக்கு தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.




■ புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி ஒன்றியம் வானகங்காடு ஊராட்சி ஊராட்சி மன்ற அலுவலகம் ஆபத்தான நிலையில் உள்ளதால் விரைந்து அப்புறப்படுத்த வேண்டும் பொதுமக்கள் கோரிக்கை

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161